**<u>1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**
**<u>O.S.No. 92/2025</u>**

02.07.2026 வா.சா.1 திரு.ஆறுமுகம்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு எந்தவிதமான அதிகார கடிதம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள அசல் மற்றும் வட்டித்தொகை சம்மந்தமான கணக்கு விபரப் பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வங்கி கணக்கு விபரத்தை தாக்கல் செய்தால் தான் உண்மையான விபரம் தெரியும் என்றும் அதை மறைப்பதற்காக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது கணக்கு ஸ்டேட்மண்டை கொடுத்துள்ளோம். நான் எந்தவிதமான கணக்கு ஸ்டேட்மண்டும் கொடுக்காமல் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
2. பிராதில் கூறியுள்ள தொகை கணக்கீடு முற்றிலும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 03.01.2025ம் தேதி எங்கள் தரப்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்னர் உண்மையான கணக்கு விபரங்களை சரிபார்க்க பட்டதால் தான் பிரதிவாதி எந்தவிதமான தொகையும் செலுத்த வேண்டியது இல்லை என்பதால் தான் அதன் பின்னர் அறிவிப்பை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அனைத்து தொகையும் செலுத்திவிட்டதால் பிராதில் குறிப்பிட்டுள்ள தொகையை அவர் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையானது தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition Uploaded on 02.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.02 15:36:09 +0530

**1 வது கூடுதல் மாவட்ட**
**உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**